திரு. து. ப. அழகமுத்து : கேரள மாநிலத்தின் எஸ்.எஸ்.எல்.ஸி. முடிவுகள் முன்னல் வெளியிடப்படுகிற காரணத்தாலும், நம் முடைய மாநில எஸ்.எஸ்.எல்.ஸி. முடிவுகள் பின்னல் வெளியிடப் படுகிற காரணத்தாலும், நமது மாநிலக் கல்லூரிகளில் சேர்வதற்கு கேரள மாணவர்களுக்கு முதல் சலுகையும், நம்முடைய மாணவர் களுக்குப் பின் சலுகையும் கிடைக்கிறது என்று கூறப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், இந்த மாநிலக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர எப்பொழுது மனுப் போடவேண்டுமோ அதற்கு முன்னதாகவே முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. முதலில் மனுப் போட்ட வர்களுக்கு முதல் சலுகை என்பது, கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற போது, கல்லூரிகள் திறக்கப்படுவதற்கு முன்பே எஸ்.எஸ்.எல்.ஸி. முடிவுகள் வந்துவிடுகின்றன என்று சொன்னார்கள். ஆனல், மார்க் சர்டிபிகேட் தாமதமாக வருவதால் கல்லூரியில் அட்மிஷன் செய்துகொள்ள மனுப் போடத் தாமதமாகிறது. ஆகவே, மார்க் குகளும் சர்டிபிகேட்களும் சீக்கிரம் கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுவும் கவனிக்கப்பட்டுத் தான் வருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : இப்போது மாணவர்கள் எண்ணிக்கை அளவிற்கு மீறி இருப்பதால் காலதாமதம் ஆகிறது என்று சொன்னர்கள். அது மட்டுமல்ல. அதில் பல இடையூறுகளும் இருக்கின்றன. இக்காரணத்தையொட்டி இப்போது பல டிவிஷன் களாக பிரித்திருப்பதை அடிப்படையாக வைத்து எஸ்.எஸ்.எல்.ஸி. போர்ட்களைக்கூட டிவிஷன் வாரியாக அமைக்க வழிவகை செய்யப் படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு எஸ்.எஸ்.எல்.ஸி. போர்ட்கள் அமைக்க முடியாது. குறிப்பிட்ட யோசனைகள் ஏதாவது இருந்தால் அதை எழுதி அனுப்பினல் கவனிக்கலாம்.

பவர் லாண்டரி

*** 57 கேள்வி.—திரு. எம். எஸ். மணி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

சென்னையில் சலவைத் தொழிலாளர்களுக்காக கூட்டுறவு முறையில் அரசாங்கம் ஒரு பவர் லாண்டரி ஏற்படுத்தத் துவங்கிய திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : The site for the establishment of a Power Laundry by the Madras Co-operative Dobikhana Limited has been selected. Plans and estimates for the

[21st January 1964

buildings to be constructed have been prepared and the licence from the Corporation of Madras is awaited. Steps are being taken to import the required machinery.

கடல் நீரைக் குடி நீராக மாற்றுதல்

* 58 **கேள்வி.—திரு. கே. நாராயணசாமி பிள்ளை :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடல் நீரிலிருந்து குடி நீர் தயாரிக்கும் இயந்திரங்களைச் சென்னையில் நிறுவ உத்தேசமுண்டா ?

(இ) அதற்கான இயந்திரங்கள் என்ன விலையாகிறது ?

(உ) அந்த இயந்திரம் தினசரி என்ன அளவிற்குக் கடல் நீரைச் சுத்தப்படுத்த முடியும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இத்தகைய திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(இ) & (உ) இவ் விஷயங்கள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

SRI R. V. SWAMINATHAN : Sir, may I know from the Hon. Minister the countries where this kind of experiment is being carried out?

THE HON. SRI R. VENKATARAMAN : Practically all over the world. There are as many as 95 countries where conversion of sea water into edible water is being made. But the experiments on a large scale are made in the United States of America, Kuwait and Israel.

SRI R. V. SWAMINATHAN : In case the Madras Government conduct a similar experiment in the Madras State, what will be the financial commitment to the Government?

THE HON. SRI R. VENKATARAMAN : It will be too early to say that. We are now consulting some of the experts and it would take some time before they give their opinions.

SRI R. V. SWAMINATHAN : May I ask the Hon. Minister that, since this is an important question and it is only in an experimental stage in other countries, will the Government come forward to consider the desirability of sending some legislators to visit those countries and observe those experiments?

THE HON. SRI R. VENKATARAMAN : If the legislators are experts, certainly this can be considered.

Advances for house construction (Government servants)

* 59 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any